29-5-1991

## "ராஜீவ் படுகொலையில் புலிகள் ஈடுபடவில்லை"-கிட்டு

(லண்டன்)
ராஜீவின் படுகொலையில் புலிகள் ஈடுபடவில்லை. அதற்கான அவசியமும் இல்லை என்று லண்டனில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்க முக்கியஸ்தர் கிட்டு கூறினர்.
'இந்து' என்னும் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில்
(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL' TAMIL DAILY'

மலர் 33 வைகாசி 15 துல்ஹஜ்ஜா 14 இதழ் 107
யாழ்ப்பாணம் புதன்கிழமை 29-05-1991

## பேசாலை அகதி முகாமில் 150 தமிழ் அகதிகள் கைது

(மன்னார்)
பேசாலை அகதி முகாமில் வைத்து நேற்று முன்தினம் 150 தமிழ் அகதிகள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டனர்.
மன்னார் தீவில் முகாமிட்டி
[4ம் பக்கம் பார்க்க]

## மிதிவெடியில் சிக்கி 3 முஸ்லிம்கள் மரணம்

(அம்பாறை)
அம்பாறை மாவட்டத்தில் மிதிவெடியில் சிக்கிய மூன்று முஸ்லிம்கள் கொல்லப்பட்டார்கள்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை வயலொன்றில் வேலைசெய்து கொண்டிருந்த முஸ்லிம்களே இவ்வாறு கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

# திருமலையில் புலிகள் தாக்குதல்

# 8 இராணுவம் ஸ்தலத்தில் பலி

## பலர் காயம்; ஆயுதங்கள் மீட்பு

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள புல்மோட்டை ஆட்டுமா பாலத்தடியில் நேற்றுக்காலை விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடித்தாக்குதலில் 8 இராணுவத்தினர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டார்கள். பலர் காயமடைந்தனர்.

இத்தாக்குதலின்போது இராணுவத்திடமிருந்து பல ஆயுதங்கள் புலிகளால் மீட்கப்பட்டன. புலிகள் தரப்பில் ஒருவர் வீரமரணமடைந்தார்.

நேற்றுக் காலை 7-45 மணியளவில் புல்மோட்டையிலுள்ள 10-ம் கட்டை இராணுவ முகாமிலிருந்து முன்னேறிய இராணுவ அணியின் மீது விடுதலைப்புலிகளினுல் திடீர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் எட்டு இராணுவத்தினர் இறந்ததுடன் பலர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தின் போது புலிகளினுல் ஏ. கே.எல். எம்.ஜி. ரக துப்பாக்கி 1, இதற்குரிய ரம்மகசீன் 5. ரவைக் கோர்வைகள் 500, ரி 56, ரவைக் இரண்டு ரகத் துப்பாக்கிகள்' 4. ரி 56 பட்மொடல் துப்பாக்கிகள் 2, ஏ. கே. ரவைக்
(4ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு செல்வோர் எண்ணிக்கை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)
வடபகுதியிலிருந்து கொழும்புக்குச் செல்வோரின் எண்ணிக்கை கடந்த சில நாட்களாக அதிகரித்து வருகிறது.
கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 5 ஆயிரத்திற்கும் அதிக
(4-ம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் படையினரால் பொதுமக்கள் கொலை, கைது

(மன்னார்)
மன்னார் மாவட்டத்தில் வாழும் பொதுமக்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் கொல்லப்பட்டும் கைதுசெய்யப்பட்டும் வருகிறார்கள்.
நானாட்டான் பகுதியில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் மாலை 4-1 மணியளவில் முகாமிலிருந்து பவள் கவச வாகனங்களில் வெளியேறி வஞ்சியன்குளம் ஊடாக முன்னேறி புதுக்கமம் கிராமத்திற்கு வந்தார்கள் புதுக்கமம் கிராமத்தில் வைத்து இராணுவத்தினரால் 15
[4ம் பக்கம் பார்க்க]

மட்டுநகரில்

## விநோதமான வாகனங்களில் மர்ம மனிதர் நடமாட்டம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு நகர்ப்புறப் பகுதியில் அண்மைக் காலமாக விநோதமான வாகனங்களில், மர்ம மனிதர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு நடமாடுபவர்களால், பல தமிழர்கள் கடத்தப்பட்டுள்ளனர். பல பகுதிகளிலும் தலையில்லாத முண்டங்களும், கை, கால்கள் தவிர ஏனைய பகுதிகள் கருகிய நிலையிலும் பல சடலங்கள் மிகக் கோரமான நிலையில் மீட்கப்பட்டுள்ளது.
அண்மையில் இது குறித்து பாராளுமன்றத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. (சி)

## பிரிட்டனின் பதிலை இலங்கை எதிர்பார்க்கிறது

(கொழும்பு)
பிரிட்டிஷ் தூதர் திரு.கிளஸ்ரோரன் விவகாரம் தொடர்பாக, பிரிட்டனின் பதிலை இலங்கை எதிர்பார்த்திருப்பதாக ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.
[4ம் பக்கம் பார்க்க]

## வடபகுதி இளைஞர் மீது தீவிர கண்காணிப்பு

(கொழும்பு)
வடபகுதியில் இருந்து கொழும்பு செல்லும் தமிழ் இளைஞர்கள் மீது பொலிஸார் தீவிரகண்காணிப்புச்செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
(4ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரில் வெளியார் தங்க பொலிஸ் அனுமதி பெறவேண்டும்

[கொழும்பு]
கொழும்பு நகரிலுள்ள தனியார் வீடுகளில் வெளியார்கள் தங்குவதற்கு பொலிஸாரின் அனுமதிபெறவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
பொலிஸ்மா அதிபர் ஏர்ணஸ் பெரேராவினுல் விடுக்கப்பட்டுள்ள இவ்அறிவித்தல் பாதுகாப்பு அமைச்சினுல் நேற்று வெளியிடப்பட்டது:
கொழும்பு நகரிலுள்ள பிரதான குடியிருப்பாளர்கள் தமது வீடுகளில் ஏற்கனவே தங்கியுள்ளோர் பற்றிய விப
(4ம் பக்கம் பார்க்க)

தமிழகத்திலுள்ள

## ஈழத்தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள்

(புதுடில்லி)
தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் உடனடியாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படமாட்டார்களென இந்திய சட்டத்துறை அமைச்சர் திரு. சுப்பிரமணியசுவாமி தெரிவித்துள்ளார்.
இலங்கைத் தமிழ் அகதிகளை உடனடியாக திருப்பி அனுப்புமாறு அண்மையில் தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியும், அ.
[4ம் பக்கம் பார்க்க]

## ராஜீவை கொல்ல பிரிட்டிஷ் கூலிப்படை உதவி முன்னர் நாடப்பட்டது!

(கொழும்பு)
ராஜீவ் காந்தியை இந்தியாவில் வைத்து கொலை செய்வதற்காக 2 மாதங்களுக்கு முன்னர் சிலர் தன்னை அணுகியதாக பிரிஷ்டிஷ் கூலிப்படை ஒன்றை சேர்ந்த ஒருவர் கூறியுள்ளார்.
இவரது இந்த அறிக்கை குறித்து கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் பிரிட்டிஷ் தூதரகத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்கள் பற்றி ஆராய்ந்து வருகிறது.
கெவின் வேசன் (வயது 53) என்ற பிரிட்டிஷ்காரரான இவர், வெடி மருந்து கைகளில் பயிற்சி பெற்ற முன்னுள் விமான சேவைப்படை அதிகாரியாவார்.
[2ம் பக்கம் பார்க்க]

## இலங்கைப் பெண் கைது

(புதுடில்லி)
ராஜீவ்காந்தியின் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 40 வயதான தமிழ் பெண்மணி ஒருவர் தமிழ்நாடு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விடுதலைசெய்யப்பட்டார்.
இவர் இந்திய புலனாய்வுத்துறையின் தீவிர விசாரணைக்குட் படுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

பாட்ஸ் கடைக்கு உகந்த புதிய முதிரை அலுமாரி இரண்டு, சோக்கேஸ் மூன்று உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 49/4, சிறும்பியடி, யாழ்ப்பாணம். (யாழ். ஸ்ரீதர் படமாளிகை பின் பக்கம்.)
(சி 4779)

சிறுப்பிட்டி வடக்கு நீர்வேலி மடத்தடி ஒழுங்கையில் வீட்டுடன் 2 பரப்புக் காணியும், 5 பரப்பு வயல் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு புத்தூர் சந்தி, விநாயகர் ஸ்ரோர்ஸ் அல்லது இருபாலைச்சந்தி ராஜா ஸ்ரோர்ஸ்.
(சி-4767]

## பழைய புத்தகங்கள்

பழைய புத்தகங்கள், கொப்பிகள், சஞ்சிகைகள், பேப்பர், போத்தல், பித்தளை, செப்பு, கோழித்தீன், வெற்றுப்பைகள் வாங்கப்படும் விற்கப்படும் சேனுதிராசா 108, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(சி 4755)

## ஜோதிடம்

சிங்கராசி அரசுத்தலைவர்கள் ராஜீவ் காந்தியினதும், ஜெயலலிதாவினதும் ஜாதகங்களின் பெலவீனங்களாலும், வியாழ சுகமின்மையாலும் நாடாளும் யோகமில்லை. ஜெயலலிதா முதல்வராகும் பதவியையும் இழப்பார் எனவும் எமது ஜோதிட சஞ்சிகைகளில் முன்கூட்டியே வெளியிடப்பட்டுள்ளன. ஜோதிட நூல்களுக்கும், கணிப்புகளுக்கும்: Prof. சத்தியதாஸன், ஞானம்ஸ், சித்தன்கேணி.
[சி 4778]

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## பண்டிதர் வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்]

யாழ். நாவலர் மகா வித்தியாலயத்தில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்று, க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த பால பண்டிதர், பண்டிதர் வகுப்புக்கள் மீண்டும் ஜூன் முதலாம் திகதி சனிக்கிழமை முதல் ஆரம்பமாகின்றன.

## மோட்டார் சைக்கிள் விபத்து இருவர் காயம்

[யாழ்ப்பாணம்]

நீர்வேலி கோப்பாய் வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாவற்குழி கைதடியைச் சேர்ந்த சின்னவன் உகந்தநாதர் (38 வயது) இராசலிங்கம் தர்மராசா (30 வயது] ஆகியோரே வீதிக்கருகில் உள்ள வாய்க்காலில் மோட்டார் சைக்கிளில் இருந்து வீழ்ந்து காயப்பட்டவர்களாவர்.
[56]

# வடக்கு சோமாலியா சுதந்திர நாடாக பிரகடனம்

[லண்டன்]

சோமாலியாவில் தனிநாடு கோரிப் போராடிவரும் 'சோமாலியா விடுதலை இயக்கம்' அந்நாட்டின் வடபகுதியை தனிநாடாக பிரகடனப்படுத்தியுள்ளது.

கடந்த பல வருடங்களாக சோமாலியாவின்வடபகுதியை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இவ்விடுதலை அமைப்பு நேற்று முன்தினம் இப்பிரகடனத்தை அறிவித்தது.

சுதந்திர நாட்டிற்கான புதிய அமைச்சரவை விரைவில் அறிவிக்கப்படவுள்ளது. இவ் அமைச்சரவையில் ஜனாதிபதி, உபஜனாதிபதி உட்பட 17 அமைச்சர்கள் இருப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சோமாலியா விடுதலை இயக்கத்தின் இப்பிரகடனத்தை அந்நாட்டுஇடைக்கால நிர்வாகம் வன்மையாக எதிர்த்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.
(சி)

## விளையாட்டு மைதான காணி அன்பளிப்பு

(உடுவில்)

நவாலி-அட்டகிரி சைவவித்தியாசாலைக்குரிய விளையாட்டு மைதானத்துக்குத் தேவையான இருபத்திமூன்று பரப்புக் காணியை நவாலியைச் சேர்ந்த திரு. ஏ. சி. விஜயநாதன் வழங்கியுள்ளார். விளையாட்டுப் போட்டிக்கு ஏற்ற வகையில் சிரமதான அடிப்படையில் செப்பனிட்டுக் கொடுப்பதற்கு நவாலி வடக்கு சனசமூக நிலையம், நவாலி மேற்கு சனசமூக நிலையம், மானிப்பாய் மருதடி விநாயகர் சனசசமூக நிலையம் ஆகியன முன்வந்துள்ளதாக அதிபர் இ. வல்லிபுரம் தெரிவித்தார்.
[109]

## இரு வார நிவாரணம்

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை – சுருவில் மக்களுக்கு இரு வார கால நிவாரணம் மண்கும்பானில் வைத்து நிவாரணப் பொருட்களாக வழங்கப்படுகின்றன. பங்கீட்டு அட்டைவைத்திருப்பவர்களுக்கும் கிராம சேவகர் அத்தாட்சியுடன் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.
(59)

## ராஜீவை கொலை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மத்திய லண்டனில் 'ஹென்ஸிட்டன்' பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் சிலர் தம்மைச் சந்தித்ததாகவும் அப்போது ராஜீவைக் கொலைசெய்வதற்கு தாம் 5லட்சம்பவுண்ஸ் கோரியதாகவும்தெரிவித்தார்.

அவர்கள் ஒரு லட்சம் பவுண்ஸ்கொடுத்து மே மாதம் இந்தியத்தேர்தல் நடைபெறும் சமயத்தில் ராஜீவை கொலை செய்யவேண்டுமென கூறியதாகவும், பின் இந்த ஒப்பந்தம் முறிவடைந்து விட்டதாகவும் பிரிட்டிஷ் உளவுப்படையிலுள்ள தமது நண்பர்களுக்கு தாம் இதுபற்றி கூறியதாகவும் அவர் கூறினார்.

கொலைக் கைக்கூலிகளுக்கு ஆயுதங்களை விநியோகிக்கும் பிரதான இடமாக பிரிட்டனே சிறந்தது என்றும் ராஜீவைக் கொலை செய்ய விரும்பியவர்கள் வேறு கூலிப்படையை அணுகியிருக்கலாமென்றும் கெவின்வேசன் இந்திய தூதரக அதிகாரிகளுக்கும் இந்தியப் பத்திரிகையாளர்களுக்கும் தொலைபேசிமூலம் தெரிவித்தார்.

மத்தியகிழக்கிலும், தென் அமெரிக்காவைச் சேர்ந்த சில நாடுகளிலும் தான் கூலிப்படையாகச் செயற்பட்டதாகவும் ராஜீவைக்கொன்றவர்கள் சக்திவாய்ந்த 'செம் டெக்ஸ்' நேரவெடிகுண்டு கருவியை அல்லது சக்திவாய்ந்த 'ரிமோட் கொன்ரோலரை' பயன்படுத்தியிருக்கலாமென்றும் கூறினார்.
(சி)

# செயல்முறை மூல விளக்கம் பாடசாலைகளில் அருகிவிட்டது

## - கல்வி அதிகாரி கவலை -

(உடுவில்)

''ஆண்டு ஒன்று முதல் எட்டு வரை சகல பாடங்களையும் கற்பிக்கக்கூடிய திறமையுடையவரே இன்று பொது ஆசிரியராகக் கணிக்கப்படுகின்றார். செயல்முறை மூலம் பாடங்களை அணுகும் முறை பாடசாலைகளில் குறைவடைந்து வருகின்றது. விஞ்ஞானம் போன்ற பாடங்கள் செயல்முறை மூலமே கற்பிக்கப்பட வேண்டும். ஆண்டு எட்டுவரை சகல பாடங்களையும் ஒரு ஆசிரியர் கற்பிப்பதற்குத் தேவையான பயிற்சிகளையும் கருத்தரங்குகளையும் நடாத்த வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் கல்வித்திணைக்கள பிரதமகல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன், யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரியில் நடைபெற்ற ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில் கூறினார்.

அதிபர் தரப் போட்டிப்பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் வகையில் ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்ட இக் கருத்தரங்கை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஒழுங்கு செய்திருந்தது.

ஆரம்பக் கல்வியில் ஒன்றிணைப்பு முறைக் கற்பித்தல், இடைநிலைக் கல்வியில் விஞ்ஞானம் கற்பித்தல் பாடவிதான முகாமிப்பு அம்சங்கள் பற்றி திரு. சிவானந்தன் எடுத்துக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது; ஆரம்ப வகுப்பிலே மாணவரின் உளவியல் பண்புகளுக்கு அமைவாகக் கூடுதல் வேலைகள் சிறு சிறு செயற்பாடுகள் மூலம் நகர்த்திச் செல்லவேண்டி இருக்கின்றது. மாணவர்களைக் குழுக்களாக்கி ஒப்படைகள் வழங்கி வழிகாட்டுபவராக ஆசிரியர் விளங்கவேண்டும். மாணவரின் சுதந்திர இயக்கம், ஈடுபாடு ஆகியவற்றுக்குத் தன்னம்பிக்கை ஊட்டப்படவேண்டும்.

அதிபர்கள் முகாமைத்துவத்தை மேம்படுத்தவேண்டி தாமே தலைமை தாங்குதல், ஆசிரியர்.மாணவர் இணைந்து செயற்படல், மானுடர் தொடர்பு பேணல், தொடர் மதிப்பீடு செய்தல், ஆக்கபூர்வமான விமர்சனம் போன்றவற்றை இயன்றவரை பேணி வரவேண்டும்.
(109)

## உற்சவம

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவில் வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 9–ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது

## இராசி பலன்

29-05-1991

புதன்கிழமை

பிரதமை: மு.இ. 7.16வரை
கேட்டை: பி.இ. 3 17வரை
சித்தயோகம்: இராகுகாலம் காலை 11.52 முதல் 1 22 வரை.
சுபநேரம்: மாலை 4.22 முதல் 5.52 வரை.

மேடம்: மனக் குழப்பம், தவறான போக்கு, ஆசாரக் குறைவு.
இடபம்: தொழில் பயிற்சி, போசன சுகம், இனசன உறவு.
மிதுனம்: வாக்கு வன்மை, அதிகார மாற்றம், அற்பர் நேசம்,
கடகம்: ஏமாற்ற உணர்வு, கொடுக்கல்வாங்கல் பிரச்சனை, வாக்கு வன்மை.
சிங்கம்; தாய்வழி உதவி, மணவிவகாரம், தொழில்நஷ்டம்.
கன்னி: தொழில் மாற்றம், குடும்பசுகம், ஆசாரமின்மை.
துலாம்; தயாளசிந்தை, உறவினர் பகை, பதட்டம்.
விருச்சிகம்: சுபகாரிய செலவு, வழிப்பகை, பணவரவு
தனுசு: எண்ணியது தடை, அற்பர் நேசம், வழக்குவம்பு.
மகரம்: தொழில் பிணக்கு, கடன்சுமை, அலைச்சல்.
கும்பம்: தொழில் லாபம், குடும்பசுகம், விருந்துபசாரம்.
மீனம்; கடமை தவறுதல், மனவேதனை, அந்நிய வாசம்.

- ஜோஸ்யர்

## கசிப்புவிற்பனையாளருக்கு அபராதம்

[உடுவில்]

ஆனைக்கோட்டை 3ம் கட்டைப் பகுதியில் கடந்த சில நாட்களாக வீடுகள் சோதனையிடப்பட்டு கசிப்புக் காய்ச்சும் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

ஆனைக்கோட்டை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கிராமியப் பொறுப்பாளர் பொ.கொலின்ஸ் தலைமையில் கசிப்பு கண்டுபிடிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட கசிப்பு நிலத்தில் ஊற்றப்பட்டதுடன் கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.
[109]

# 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



**நாகராசா சிதம்பரநடராஜன்**
(பாபு)

வீர ஜனனம் 06-02-1970 — வீரமரணம்: 29-05-1987

புத்தகப்பை தொங்கவேண்டிய உனது தோளில் துவக்குத் தொங்கிவிட்டது.
நாளை மலரும் ஈழமதில், உங்கள் நாமம் நட்ட கல்லும் பேசும் இது நடக்குமண்ணு.

தந்தை, தாய், தங்கை.

''இராசபவனம்'',
அல்வாய் மேற்கு, அல்வாய். [சி 4747]

# I D P Computer Centre

## I D P கொம்பியூற்றர் பயிற்சி நிலையம்

பிரதான வீதி, மானிப்பாய்.
(மருத்துவமனைக்கு அண்மையில்)

அடுத்த புதிய வகுப்புக்கள் பின்வரும் நெறியில் 01-06-1991 சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகின்றது.

1. ★ BASIC 2. ★ d BASE III +

பயில விரும்பும் மாணவர்கள் 01-06-1991-க்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்.

K. தளையசிங்கம்
நிர்வாக இயக்குநர்

(சி 4780)

## முல்லை மாவட்ட தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள்

## புதுக்குடியிருப்பில்

## இன்று (1991-05-29) ஆரம்பிக்கும்

# பனம் சாராய வடிசாலை



சிறப்புடன் இயங்க

# வாழ்த்துகின்றோம்

★ ★

- ★ பருத்தித்துறை தெ. ப. பொ. கூ. சங்கம்
- ★ கட்டைவேலி ,,
- ★ அச்சுவேலி ,,
- ★ கோப்பாய் ,,
- ★ யாழ்.மாநகர ,,
- ★ கோண்டாவில் ,,
- ★ சுன்னாகம் / அளவெட்டி ,,
- ★ தெல்லிப்பழை ,,
- ★ மானிப்பாய் ,,
- ★ பண்டத்தரிப்பு ,,
- ★ அரியாலை தெ. ப. பொ. கூ. சங்கம்.
- ★ சாவகச்சேரி ,,
- ★ பச்சிலைப்பள்ளி ,,
- ★ ஊர்காவற்றுறை ,,
- ★ வேலணை ,,
- ★ பூநகரி ,,
- ★ கிளிநொச்சி ,,
- ★ கொடிகாமம் ,,
- ★ சங்கானை ,,

தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச்சங்கங்களின் சங்கானை வடிசாலை.
தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச்சங்கங்களின் வரணி வடிசாலை.

## வடமாகாண தெ. ப. பொ. கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

(ஏ 1334)

# "இத்தாலி மருமகன் - ராஜீவ் இமல்டா மார்கோஸ் - சோனியா"

(புதுடில்லி)

'இத்தாலியின் மருமகன் என எதிர்க்கட்சியினரால் ராஜீவ் அழைக்கப்பட்டுவந்த நேரம் சோனியா மீதும் பல பழிகளும் குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டன.

ராஜீவின் ஆட்சியின்போது அமைச்சர் பதவி வழங்குவதில் சோனியா முக்கிய பங்கெடுத்துச் செயற்பட்டதாகவும் பலத்த குற்றச்சாட்டிற்கு இலக்காகினர்.

அரசியல் நடவடிக்கையில் அதிகமாக தலையிடுவதாக அப்போதைய ஜனதிபதி திரு. ஜெயில்சிங்கும் வன்மையாகக் கண்டித்தார். எனினும் இது பற்றி யாரும் அக்கறைப்படவில்லை.

தமது குடும்பம்மீது அபகீர்த்தியை ஏற்படுத்துவதாக கருதி தம்மை கொலை செய்யப் போவவாக சோனியா கடுமையாக பயமுறுத்தியதாக எதிர்க்கட்சி தலைவர் ஒருவர் கூறினர்.

சஞ்சய் காந்தியின் மனைவி மேனகா ஒருமுறை சோனியாவை 'இமல்டா மார்க்கோஸ்' என்று வர்ணித்திருந்தார். இதுபெரும் சர்ச்சையைக்கூட ஏற்படுத்தியது. எனது கணவனின் அரசியல் விடயத்தில் நான் தலையிட்டியிருந்தால் அவர் நாட்டின் பிரதமராகவல்ல சாதாரண எம் பியாகக்கூட இருந்திருக்கமாட்டார் என சோனியா காந்தி கூறியதும் குறிப்பிடத்தக்கது. (சி)

# எதியோப்பிய தலைநகரும் புரட்சியாளரிடம் வீழ்ச்சி

(அடிஸ் அபாபா)

எதியோப்பிய புரட்சிப்படையினர் நேற்று தலைநகருக்குள் பிரவேசித்து ஜனதிபதி மாளிகை உட்பட சகல அரச திணைக்களங்களையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை முதல் லண்டனில் எதியோப்பிய மக்கள்புரட்சிக்குழுவுக்கும் அரசுக்கும் இடையில் நடந்து வந்த சமாதானப் பேச்சுவார்த்தையும், புரட்கிப் படையினர் நகரைக் கைப்பற்றியதை அடுத்து இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளது. (பூ)

# போதனசிரியர்களுக்கு கொழும்பில் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

பயிலுனர் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க தெரிவு செய்யப்பட்டிருக்கும் போதனசிரியர்களுக்குகொழும்பில் பயிற்சி வகுப்புகள் நடத்தபடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இப்போதனசிரியர்களுக்கு நேர்முகப்பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு விரைவில் நியமனப்பத்திரங்கள் வழங்கப்படும். அதன் பின்பு அவர்கள் பயிற்சிக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் (152)

## பிரிட்டனின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சித்தொண்டர்கள் மோசடி செய்ததாக இவர் சுமத்திய குற்றச்சாட்டை அடுத்தே இவ்விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

திரு. பெர்ணுட் திலகரத்ன பிரிட்டன் சென்று இது குறித்துப் பேசியதாகவும், பிரிட்டன் என்ன நடவடிக்கை எடுக்கவுள்ளதென்று அவர்களின் பதிலைத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினர். (சி)

## தமிழகத்திலுள்ள

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தி. மு. க. பொதுச் செயலர் செல்வி ெ யலலிதாவும் கோரியிருந்தனர்.

இதற்குப் பதிலளித்தபோது, தமிழ் அகதிகள் உடனடியாக திருப்பி அனுப்பப்படமாட்டார்களென்றும் இலங்கையில் சுமுகநிலை ஏற்படும் வரை அவர்கள் இங்கு தங்கியிருக்க அனுமதிக்கப்படுவர் என்றும் திரு. சுப்பிரமணிய சுவாமி கூறினர். [சி]

# திரிவேணியில் ராஜீவ் அஸ்தி நேற்று கரைக்கப்பட்டது

(புதுடில்லி)

அமரர் ராஜீவ் காந்தியின் அஸ்தி, நேற்று மாலை கங்கை, யமுனை, சரஸ்வதி நதிகள் சங்கமமாகும் திரிவேணியில் கரைக்கப்பட்டது.

திருமதி சோனியா காந்தியும், பிள்ளைகள் ராகுல், பிரியங்கா ஆகியோரும் அஸ்திக் கலசத்தைத் தாங்கிச் சென்றபோது 'ராஜீவ் காந்தி நாமம் நீடூழி வாழ்க' என மக்கள் கோஷம் எழுப்பினர்.

அஸ்திக் கலசம் எடுத்துச் சென்றபோதும், கரைக்கும் போதும் ஹெலிகொப்டரில் இருந்து ரோஜா மலர்கள் தூவப்பட்டன. (பூ)

# மட்டு, மன்னர் பகுதிகளில் வாகனங்கள் மீது தாக்கு

(கொழும்பு)

மட்டக்களப்பு, மன்னர் பகுதிகளில் ரோந்து சென்ற படையினர் மீது நேற்று விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர்கள் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மன்னர், நானட்டன் பகுதியில் நேற்றுக்காலை ரோந்து சென்ற இராணுவ அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

மட்டக்களப்பில் பொலிஸ் வாகனம் ஒன்றின்மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலினல் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றி தெரிவிக்கப்படவில்லை. (ரி)

வரதராஜப்பெருமாளுக்கு

# குண்டு துளைக்காத கவசம் ராஜீவ் வழங்கினர்!

(புதுடில்லி)

வடக்குக்-கிழக்கு மாகாண முன்னள் முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாளுக்கு அண்மையில் திரு. ராஜீவ் காந்தி குண்டு துளைக்காத மார்புக் கவசம் ஒன்றை வழங்கி இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்தியப் பிரதேசத்திலிருந்து இடம் மாற்றப்பட்டுள்ள திரு. பெருமாள், தற்போது பீகார் மாநிலத்தில் பலத்த பாதுகாப்புடன் இருந்துவருகிறர்.

இவரைச் சென்று சந்தித்த திரு. ராஜீவ் காந்தி அப்போது இந்த மார்புக் கவசத்தை திரு. பெருமாளுக்கு வழங்கியிருந்தார். (சி)

## மன்னர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இதேவேளை நறுவலிக்குளத்திலிருந்து உழவு யந்திரத்தில் வந்த இரு குடும்பஸ்தர்களை சுட்டுக் கொன்றர்கள்.

இப்பகுதிகளில் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதை கேள்வியுற்ற விடுதலைப்புலிகள் சம்பவம் நடந்த இடத்துக்கு சென்று இராணுவத்தின்மீது கடும் தாக்குதலை நடத்தினர்கள்.

புலிகளின் தாக்குதலையடுத்து இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றனர். [ரி)

# பிரெஞ்சு வைத்தியக் குழு இயங்குவது பற்றி ஜூன் 8ல் முடிவுசெய்யப்படும்

[யாழ்ப்பாணம்)

எம். எஸ். எவ். என்ற பிரெஞ்சு வைத்திய தொண்டர் அமைப்பு இலங்கையில் தொடர்ந்து இயங்குவதுபற்றி ஜூன்மாதம் 8-ந்திகதி தீர்மானம் எடுக்கப்படவிருக்கிறது.

எம் எஸ். எவ். வைத்திய வாகனத்தில் வந்த தொண்டர் நால்வர் மீது வவுனியா தாண்டிக்குளப் பகுதியில் பே மாதம் 3-ந் திகதி நடைபெற்ற சிறிலங்கா ஹெலித் தாக்குதல்கள் சம்பந்தமான விசாரணைக்குழு அறிக்கை ஜூன் மாதம் 7ந் திகதி வெளிவரவிருக்கிறது.

மட்டுநகர். திருமலை, மன்னர், பருத்தித்துறை ஆகிய இடங்களிலுள்ள வைத்திய சாலைகளில் எம், எஸ். எவ். என்ற பிரெஞ்சு வைத்திய தொண்டர் அமைப்பு இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது. [153]

★ ஒருநாள் கிரிக்கெட்

# போட்டித் தொடரில் மேற்கு இந்தியா தோல்வி

(லோட்ஸ்)

இங்கிலாந்துக்கும்-மே. இந்திய அணிக்குமிடையில் நடைபெற்ற சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் இங்கிலாந்து 3—0 என்ற ரீதியில் வெற்றிபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற 3வதும் இறுதியுமான போட்டியில் மே. இந்திய அணி 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 265 ஓட்டங்களைப் பெற்றது

இங்கிலாந்து அணி 46.1 ஓவரில் 3விக்கெட் இழப்பிற்கு 268 ஓட்டங்களைப் பெற்று, வெற்றியீட்டியது. (சி)

## திருமலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடுகள் 24, நடுத்தர ரவைகள் 800 ஆகிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலின் போது எட்டு இராணுவத்தினர் இறந்ததாக சிறிலங்கா அரசு அறிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இம்மோதலில் கன்னியாவைச் சேர்ந்த பாண்டியன் என்னும் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளி வீரமரணமடைந்தார்.

இவருக்கு புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (ரி)

## ராஜீவ்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அவர் இவ்வாறு கூறினர்.

அப்பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது;

இவ்வருடம் மார்ச் 5ம் நாள் புலிகளின் பிரதிநிதியான காசி ஆனந்தனும், ராஜீவ் காந்தியும் புதுடில்லியில் சந்தித்துக்கொண்டனர்.

இச்சந்திப்பின்போது நல்ல உறவு ஏற்பட்டது. இச்சந்திப்பு புலிகளின் தலைவர் பிரபாகரனின் விருப்பப்படியே நடந்தது என்றும் கூறிய அவர், புலிகள் ராஜீவின் படுகொலையில் ஈடுபடவில்லை என்றும் மேலும் கூறினர்.

45 நிமிடங்கள் வரை நடந்த இச்சந்திப்பின்போது, தம்மால் இயன்ற அளவு இலங்கைத் தமிழர்களின் நலனைக் காக்கத் தாம் பாடுபடுவேன் என ராஜீவ் காந்தி உறுதி அளித்ததாகவும் கூட்டு தெரிவித்தார்.

இப்படுகொலையில் புலிகளுக்கு எதிரான தமிழ்க் குழுக்களும் மற்றும் இலங்கை அரசும் ஈடுபட்டிருக்கக்கூடும் என்றும் அவர் சந்தேகம் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி வெற்றி பெற்று மீண்டும் பிரதமரானல், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கக்கூடும் என்ற அச்சம் இலங்கை அரசுக்கு இருந்தது எனக் கூறிய அவர், இலங்கை அரசும், ஏனைய தமிழ்க் குழுக்களும் இக்கொலையில் ஈடுபட்டிருக்கலாம் என்றும் கூறினர்,

ராஜீவைக் கொல்வதற்குப் புலிகளுக்கு எந்தவிதக் காழ்ப்புணர்ச்சியும் இல்லையெனவும் அவர் உறுதிபடக் கூறினர். (ரி)

## வடபகுதி

[1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, ஏற்கனவே கொழும்பில் தங்கியுள்ள வடபகுதித் தமிழ் இளைஞர்களும் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

வெசாக் கொண்டாட்டங்கள் கொழும்பில் நடைபெற்று வருகின்றபோதும் தமிழ் இளைஞர்கள் தங்கியுள்ள இடங்கள் மீது பலத்த கண்காணிப்புச் செலுத்தப்பட்டுவருகிறது. (ரி)

## பேசாலை

[1ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கும் இராணுவத்தினரே இந்த அகதி மூகாமிற்கு வந்து அகதிகளைக் கைதுசெய்தார்கள்,

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் பதினைந்து பேர் மன்னர்தீவிற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இவர்களுக்கு இதுவரை என்ன நடந்தது என்பது பற்றி தெரிவிக்கப்படவில்லை. (ரி]

## கொழும்பு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ரங்களை அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யுமாறும் கேட்கப்பட்டுள்ளார்கள்.

அவசர காலச் சட்டவிதிகளின் பிரகாரம் கொழும்பு நகரிலுள்ள பிரதான குடியிருப்பாளர்கள் தமது வீட்டிலுள்ள குடும்ப அங்கத்தவர்கள், மற்றும் தங்கியிருப்போரின் பெயர் விபரங்களை அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தரத்திற்கு குறையாத அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

புதிதாக மேற்குறிப்பிட்ட வீடுகளில் தங்க வருபவர்கள் பற்றி பொலிஸ் நிலையத்தில் அனுமதி பெற்ற பின்பே தங்க வைக்க வேண்டும் பொலிஸாருக்கு தெரிவிக்காமல் யாராவது தங்க வைக்கப்பட்டால் குறிப்பிடப்படும் வீட்டு உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டு விசாரணை முடியும் வரை தடுத்து வைக்கப்படுவார்கள் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. (ரி)

## கொழும்பு செல்வோர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மானேர் வடபகுதியிலிருந்து கொழும்பு சென்றுள்ளனர்.

தினமும் பத்துக்கு மேற்பட்ட பஸ்கள், பல ஆட்டோக்கள் முத்திரைச் சந்தையிலிருந்து கொழும்பு செல்லும் பிரயாணிகளை ஏற்றிச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (152)

நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றேட் — கோண்டாவில்

புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை

5ம் ஆண்டு மாணவர்களுக்கான மேற்படி பரீட்சை 01 06-91 சனி மு. ப. 11-00க்கு நடைபெறவுள்ளது. தங்கள் பெயர்களை முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும். இப்பரீட்சை மாதமிருமுறை தொடர்ந்து நடாத்தப்படும்.

கணிதம்: திரு. நயினை S. S. பிள்ளை
தமிழ்: திரு. சுந்தரலிங்கம்

விபரங்களுக்கு: நிர்வாகி

(எ-1335)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63.ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மே மாதம் 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/100306/81.